## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

# OS.No.92/2004

| | |
|---|---|
| Witness Rank | PW1 |
| Name of the Witness | சுதாகர் |
| Father's Name | சிவசங்கரன் |
| Age | 67 |
| Occupation | NLC ஓய்வு பெற்ற ஊழியர் |
| Address | கடலூர் |

1969-ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 30.01.2026 அன்று **செல்வி. பா.பெபேயா, பி.ஏ., எல்.எல்.பி.,** கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதி. அந்த வகையில் இந்த வழக்கினை பற்றி எனக்கு நேரடியாக தெரியும். இவ்வழக்கில் எனது சாட்சியத்தை கூடுதல் சத்தியப்பிரமாண வாக்குமூலமாக கணிப்பொறி அச்சு செய்து கணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதன் விவரங்களை என் வழக்கறிஞர் விளக்கி கூறினார். அதன் விவரத்தை தெரிந்து கொண்ட பிறகு நான் சத்தியப்பிரமாண வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தேன். அதனை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக கருதிட வேண்டுகின்றேன். எனது சாட்சியத்தை உறுதியூட்ட கீழ்கண்ட ஆவணங்களை சமர்ப்பிக்கின்றேன்.

| **வ.எண்.** | **ஆவணங்களின் வரிசை** | **தேதி** | **ஆவணங்கள்** |
|---|---|---|---|
| 1. | **வா.த.சா.ஆ.22** | 15.02.2024 | பிரமாண வாக்குமூலத்தின் சான்றிட்ட நகல் |
| 2. | **வா.த.சா.ஆ.23** | 23.03.2017 | 16 ஆம் பிரதிவாதி P.R. பாண்டியனுக்க எதிராக தாக்கல் செய்த O.S.32/2004 வழக்கில் |

PHEBE B

Digitally signed by PHEBE B
Date: 2026.01.30 17:39:31 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | சர்வே எண் 70/3 ஐ தடை செய்யக்கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை தீர்ப்பாணை நகல் |
| 3. | **வா.த.சா.ஆ.24** | 27.12.2013 | ந.க.வி 3/10318/2013 டிரஸ்ட் பெயருக்கே மாற்றம் செய்யப்பட்ட பட்டா |
| 4. | **வா.த.சா.ஆ.25** | 18.03.2014 | கணினி பட்டா |
| 5. | **வா.த.சா.ஆ.26** | 08.05.2023 | 16 ஆம் பிரதிவாதியின் பட்டாவை ரத்து செய்யகோரி மாவட்ட ஆட்சியரிடம் அளித்த மனு மற்றும் ஒப்புகை சீட்டு |
| 6. | **வா.த.சா.ஆ.27** | 09.01.2017 | நிலவரி ரசீது |
| 7. | **வா.த.சா.ஆ.28** | 17.01.2018 | நிலவரி ரசீது |
| 8. | **வா.த.சா.ஆ.29** | 05.02.2019 | நிலவரி ரசீது |
| 9. | **வா.த.சா.ஆ.30** | 30.01.2024 | நிலவரி ரசீது |
| 10. | **வா.த.சா.ஆ.31** | 13.01.2025 | நிலவரி ரசீது |
| 11. | **வா.த.சா.ஆ.32** | 23.05.2023 | 7 ம் பிரதிவாதி கந்தபெருமாளுக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் |
| 12. | **வா.த.சா.ஆ.33** | 25.05.2023 | மாவட்ட பதிவாளர் மற்றும் தரப்பனர்களுக்கு கிரயத்தை ரத்து செய்ய கோரி அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பு |
| 13. | **வா.த.சா.ஆ.34** | 23.06.2023 | கிரயத்தை ரத்து செய்து, கிரைய ரத்து பதிவு பத்திரம் |
| 14. | **வா.த.சா.ஆ.35** | 28.06.2023 | மாவட்ட பதிவாளர் கிரயம் ரத்து செய்யப்பட்டு விட்டதாக கொடுத்த அறிவிப்பு |
| 15. | **வா.த.சா.ஆ.36** | 29.09.2023 | மாவட்ட பதிவாளர் சார்பதிவாளருக்கு மற்றும் கிரய ஆவணம் ஏற்படுத்தியோர்க்கும் அனுப்பிய அறிவிப்பு  நகல் தணிகாசலம் ரத்து பத்திரம். |
| 16. | **வா.த.சா.ஆ.37** | 18.10.2023 | தணிகாசலம் ரத்து பத்திரம் |
| 17. | **வா.த.சா.ஆ.38** | 22.11.2023 | O.S. 440/2023 வழக்கின் பிராது நகல் |
| 18. | **வா.த.சா.ஆ.39** | 27.09.2024 | I.A.No.429/2024 in OS.No.440/2023 மனு நகல் |
| 19. | **வா.த.சா.ஆ.40** | 19.10.2023 | பாலு த/பெ பாவாடை என்பவருடன் பதிவு செய்யப்படாத  கிரய உடன்படிக்கை ஆவணம் |
| 20. | **வா.த.சா.ஆ.41** | 15.07.2024 | O.S. 95/2024 வழக்கின் சான்றிட்ட பிராது நகல் |
| 21. | **வா.த.சா.ஆ.42** | 23.09.2024 | கடலூர் வருவாய் கோட்டாட்சியரால் வாதிக்கு |

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.01.30 17:39:36 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | சார்வு செய்யப்பட்ட உத்திரவு நகல் |
| 22. | **வா.த.சா.ஆ.43** | 20.08.2011 | இடைக்கால மனு எண்.758/2011 in O.S. 616/2007 தீர்ப்பானை சான்றிட்ட நகல் |
| 23. | **வா.த.சா.ஆ.44** | 20.08.2011 | இடைக்கால மனு எண்.758/2011 in O.S. 616/2007 உத்தரவு சான்றிட்ட நகல் |
| 24. | **வா.த.சா.ஆ.45** | 14.08.2012 | CRP.No. 514/2012 ல் மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்ற உத்தரவு நகல் |
| 25. | **வா.த.சா.ஆ.46** | 24.01.2018 | IA.194/2014 in O.S.616/20007 வழக்கில் சம்மந்தப்பட்ட வழக்குமூலத்திற்காக தொடரும் உரிமையை மறுத்து நிராகரிக்கப்பட்ட உத்தரவின் நகல் |

வா.த.சா.ஆவணங்கள் 22 முதல் 46 வரை குறியீடுசெய்யப்படுகிறது.
தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகின்றேன்.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.01.30 17:39:40 +0530

***Additional District Munsif , Cuddalore.***

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.92/2004** தேதி: **30.01.2026**

வாதி தரப்பு சாட்சி -1 (சுதாகர், த/பெ.சிவசங்கரன்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**7** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

(1) ஜனார்த்தனன் யார் என்றால் நிர்வாகத்தின் நிர்வாகஸ்தர் ஆவார். அவருக்கு வழக்கு சொத்தினை நிர்வாகம் செய்வதற்கும் தான தர்மம் செய்யும் முழு அதிகாரம் உண்டு என்றால் சரிதான். ஜனார்த்தனன் தான தர்மம் செய்ய போதிய வருமானம் இல்லாததால் தான் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 225/2003 ல் உத்தரவு பெற்று வழக்கு சொத்தினை விற்றார் என்றால் சரிதான். ஆனால் அவ்வாறான வழக்கு செல்லாததாகும்.

(2) சார்பு நீதிமன்றத்தில் பெற்ற உத்ரவின் பெயரில் அவர் விற்றார் என்றால் சரிதான். ஆனால் இது செல்லாது. இந்த வழக்கில் 1 முதல் 7 வரையிலான வாதிகள் மேற்கண்ட அசல் வழக்கு எண் 225/2003 ல் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். நான் அந்த வழக்கில் தரப்பினராக இல்லாத போது நான் இந்த வழக்கு தாக்கல் செய்ய தகுதியற்றவர் என்றால் சரியல்ல.

(3) நான் சார்பு நீதிமன்றத்தின் உத்தரவின் மீது மேற்முறையீடு தான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. விற்பணை செய்யப்பட்ட வழக்கு சொத்தின் வழிகாட்டி மதிப்பு மற்றும் சந்தை மதிப்பு பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு சந்தை மதிப்பீடு மற்றும் வழிகாட்டி மதிப்பு குறிப்பிடாமல் நான்

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.01.30 17:39:45 +0530

செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல.

(4) 1 ஆம் பிரதிவாதி ஜனார்த்தனன் மொத்தம் எத்தனை சொத்துக்களை விற்றார் என்றால் அவரிடம் ஒப்படைத்த மொத்த சொத்துக்களையும் விற்றுவிட்டார். அதில் ஜனார்த்தனன் சொத்தும் அடங்கும் என்றால் கிடையாது. ஜனார்த்தனன் விற்பனை செய்த சொத்து எந்த ஊரில் இருந்தது என்றால் வெள்ளப்பாக்கம் கிராமத்தில் இருந்தது. வெள்ளப்பாக்கம் கிராமத்தில் மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். நான் இந்த வழக்கை ஏற்கனவே நடத்தாமல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

(5) மேற்படி உரிய நேரத்தில் அதற்கு மனு தாக்கல் செய்யாததால் கால தாமத மனுவுடன் மனு தாக்கல் செய்தேன் என்றாலும் அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும் அதன் பின் மறு சீராய்வு மனு தாக்கல் செய்து அது அனுமதிக்கப்பட்டதன் பெயரில் தான் இவ்வழக்கு மீண்டும் நீதிமன்றத்திற்கு எடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன விவரத்தை எனது பிரமான வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை.

(6) அசல் வழக்கு எண் 32/2004 ல் உறுத்துக்கட்டளை பரிகாரம் இந்தநீதிமன்றத்தில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். உறுத்துக்கட்டளை உத்தரவின் 3 வது பத்தியில் "பிரதிவாதிகள் சட்ட வழிமுறைகளின் கீழ் செர்த்து சுவாதீனம் எடுப்பதற்கு நடவடிக்கை எபடுக்துக் கொள்ளலாம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே சார்பு நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று வழக்கு சொத்தினை விற்றது சரிதான் என்றால் சரிதான்.

(7) 7 ஆம் வாதி இறந்து விட்டார் என்றால் சரிதான். அதனை முறையாக நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். அவரது

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.01.30 17:39:48 +0530

வாரிசை தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன். நான் கூறுவது போல் உயில் ஆவணத்தில் சொல்லப்பட்ட விதிகள் பெருந்தாது என்றால் இந்து வாரிசு உரிமை சட்டத்தின் படி செல்லாது என்றால் சரியல்ல.

(8) வெள்ளப்பாக்கத்தில் உள்ள நிலங்களுக்கு பாசன வசதிகள் உள்ளதா என்றால் 7 ஆம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ள சொத்திற்கு பாசன வசதி கிடையாது. 6 ஆம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்திற்கு பாசன வசதி உண்டு. வாயிக்கால் பாசனம் தான். வழக்கு சொத்தை நாங்கள் குத்தகை தாரருக்கு கொடுக்காததால் அதில் உள்ள மோட்டார், பம்பு செட்டை திருடிச்சென்றார்கள் என்றால் சரிதான் ஆனால் அது குத்தககை பிரச்சணைக்காக நடக்கவில்லை.

(9) பெண் வாரிசுகளை சேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 7-ம் பிரதிவாதிக்கும் இந்த மோட்டர் திருட்டுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். இராமசந்திரன் யார் என்றால் எனது உறவினர். இராமசந்திரன் தான் வழக்கு சொத்துக்களில் விவசாயம் செய்து வருகிறார் என்றால் வழக்கு சொத்தின் ஒரு பகுதியை விவசாயம் செய்து வருகிறார். இராமசந்திரன் குத்தகையை பணமாக தருகிறாரா அல்லது விலைச்சலாக தருகிறாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

(10) இராமசந்திரன் குத்தகை எடுத்து அதில் விவசாயம் செய்து வருகிறார் என்பதற்கு கணக்கு ஏதும் உள்ளாதா என்றால் அந்த கணக்கினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த கணக்குகள் எங்களிடம் இல்லை ஆகவே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

(11) தற்போது நிர்வாகி என்று யார் உள்ளார் என்றால் யாரும் இல்லை. 1-ம் வாதி நிர்வாகம் செய்த காலத்தில் வரவு செலவு கணக்குகளை வங்கியில்

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.01.30 17:39:53 +0530

சேமித்து வைத்தாரா என்றால் எனக்கு தெரியாது. 7-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதியிடம் வாங்கிய பணத்தை நீதிமன்றத்தில் Deposit செய்ய வேண்டும் என கோரியுள்ளேன் என்றால் சரிதான்.

(12) இராமசந்திரனிடமிருந்து குத்தகை தொகையை வசூலிக்க கோரி நீதிமன்றத்தில் ஏதும் பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது .

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.01.30 17:39:56 +0530

***Additional District Munsif , Cuddalore.***